பக்கங்கள் 20+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை 02.11.2025 | அதிர்வு 95

## வீதி விபத்துக்களில் நால்வர் உயிரிழப்பு!




இலங்கையின் வெவ் வேறு பகுதிகளில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# முழுக் கத்தோலிக்க சமூகத்தையும் ஏமாற்றிவிட்டது அநுர அரசாங்கம்!

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவல்களை இந்த அரசும் மறைப்பது ஏன் என்றும் சஜித் கேள்வி



“ஏப்ரல் மாதம் ஆகும் போது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாகச் சுபச் செய்தி ஒன்றைச் சொல்வோம் என்று இந்த அரசு ஏலவே தெரிவித்திருந்தது. ஆனால், இதுவரை அந்தச் சுப செய்தி வெளிவரவில்லை. தற்போதைய அரசு முழுக் கத்தோலிக்க சமூகத்தையும் ஏமாற்றி 02

# நவ. 21 இல் எதிரணிகளின் கூட்டுப் பேரணியில் முன்னாள் ஜனாதிபதிகள் பங்கேற்கமாட்டார்கள்



தேசிய மக்கள் சக்தி அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடை நகரில் நடத்தப்படவுள்ள எதிர்கட்சிகளின் கூட்டுப் பேரணியில் முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த 03


# இளைஞனைக் காணவில்லை என்று தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைக் காணவில்லை என்று தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சதீஷ்குமார் சயோசியன் (வயது – 17) என்ற இளைஞனையே காணவில்லை என்று தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல்போன இளைஞனுடைய தந்தையே தெல்லிப்பழை பொலிஸில் இந்த முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நரியிட்டான், மல்லாகம் பகுதியில் வசிக்கும் குறித்த இளைஞன் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வீட்டைவிட்டுச் சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை எனப் பெற்றோர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.







## முழுக் கத்தோ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச சபை வேட்பாளர்களுடனான சந்திப்பு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “நாட்டு மக்கள் தற்போது ஏமாற்றமடைந்து போயுள்ளனர். மாற்றத்தை எதிர்பார்த்து புதிய முறைமைக்கு வாக்களித்த இலட்சக்கணக்கான மக்கள், மாகாண சபைத் தேர்தல்கள் மூலம் இதை விடவும் சிறந்த மாற்றீடும், வலுவான புதிய பாதையும் உதயாகும் என்ற எதிர்பார்ப்பில் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கட்சியின் அடையாளத்தைப் பாதுகாத்துக்கொண்டே நாட்டுக்காக ஒன்றுபட வேண்டிய இடத்தில் ஒன்றுபடுவதும், இணைந்து பணியாற்ற வேண்டிய இடத்தில் இணைந்து பணியாற்றுவதும் முக்கியமானதாக அமைந்து காணப்படுகின்றன.

ஐந்தரை வருடங்களேயான ஐக்கிய மக்கள் சக்தி தற்போது 1773 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களையும், 39 உள்ளூராட்சி தவிசாளர்களையும், 21 பிரதித் தவிசாளர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டில் உள்ள 340 உள்ளூராட்சி மன்றங்களில் 100 இற்கும் மேற்பட்டவற்றின் தவிசாளர் பதவி எதிர்க்கட்சிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பதவியையும், நாடாளுமன்றப் பெரும்பான்மை, பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரமும் அரசிடம் இருக்கும் போது, இன்று அரசாளுகை இயலாமையால் வீழ்ச்சிப் பாதையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய அரசு நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இந்த அரசு முழு சமூகத்தையும் ஏமாற்றியுள்ளது. ஏப்ரல் மாதம் ஆகும் போது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாகச் சுபச் செய்தி ஒன்றைச் சொல்வோம் என்று அரசு ஏலவே தெரிவித்திருந்தது. ஆனால், இதுவரை அந்தச் சுப செய்தி வெளிவரவில்லை. தற்போதைய அரசு முழுக் கத்தோலிக்க சமூகத்தையுமே ஏமாற்றியுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான தகவல்களை இந்த அரசும் மறைப்பது பெரும் பிரச்சினையையாகக் காணப்படுகின்றது.” – என்றார்.









# இயக்கச்சியில் கோர விபத்து!

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி, இயக்கச்சி பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற காரும் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த டிப்பரும் விபத்துக்கு உள்ளாகின.

டிப்பர் சாரதியும் காரில் பயணித்தவர்களும் காயமடைந்தனர். தமிழ்செல்வன் கதிர் (வயது- 38) என்றும் டிப்பர் சாரதியும் காரில் பயணித்த வேலாயுதம் சர்வேந்தன் (வயது -63), ஜெகன் மனுசன் (வயது -20) ஆகியோரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு – கண்டி பிரதான வீதியின் திஹாரிய பகுதியில், கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, வீதியைக் கடக்கும் பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வத்துபிட்டிவல பகுதியைச் சேர்ந்த 61 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் வத்துபிட்டிவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், நிட்டம்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலாவ 419 கிராம வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று, எதிர்த்திசையில் இருந்து வந்த டிரக்டருடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், டிரக்டரில் பயணித்த ஒருவர் மற்றும் ஒரு குழந்தை ஆகியோர் காயமடைந்தனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தலாவ, ஹிங்குருவெவ பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் அனுராதபுரம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ஹெட்டிபொல – தொரகல்ல பகுதியில் சிலாபத்திலிருந்து குருநாகல் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்தது. விபத்துக்குள்ளானதில், பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் குளியாபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர் பிங்கிரிய, மெதடம்புவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

சடலம் குளியாபிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஹெட்டிபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தளம் – அனுராதபுரம் வீதியில் சிரம்பியாடிய பகுதியில், அனுராதபுரத்திலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற லொறி, அதே திசையில் பயணித்த மற்றொரு லொறியின் பின்புறத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தின்போது பலத்த காயமடைந்த நான்கு பெண்கள் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மன்னார், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த 55 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், லொரியின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நவ. 21 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்தப் பேரணியில் பங்கேற்கமாட்டார்கள்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதிகள் யாரும் இந்த எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொள்ளக் கூடாது என்ற கருத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார். இதன் பின்னரே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இருப்பினும் அவர்களின் முழுமையான ஒத்துழைப்புகள் கிடைக்கும் என்று பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்க்கட்சிகளின் கூட்டுப் பேரணியில் பங்கேற்பதில்லை என்று தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான அரசியல் முரண்பாடுகள் மீண்டும் வலுவடைந்து வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க இந்த எதிர்ப்புக் கூட்டணியில் ஒரு தரப்பாக இல்லாவிட்டாலும், இந்தப் பேரணியின் பின்னணியில் உள்ள கட்சிகளில் பெரும்பாலானவை சஜித் பிரேமதாஸவின் நேரடி அரசியல் போட்டியாளரான ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்பு கூட்டணி வைத்திருந்த கட்சிகளாக உள்ளன.

இதனால், சஜித்தின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, கூட்டணியின் நோக்கங்கள் மற்றும் தலைமைத்துவம் குறித்த சந்தேகம் காரணமாக, இந்தக் கூட்டுப் பேரணியில் இருந்து விலகி தனி வழியில் செயற்படத் தீர்மானித்துள்ளது.

அரசை எதிர்க்கும் அதேவேளை, முன்னாள் ஜனாதிபதிகள் விவகாரம் மற்றும் பிரதான எதிர்க்கட்சியின் விலகல் போன்றவை இந்த நுகேகொடை பேரணியின் ஒருங்கிணைப்பில் உள்ள நெருக்கடிகளைப் பிரதிபலிக்கின்றது. மறுபுறம் சஜித் பிரேமதாஸ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் மீளிணைவு தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.





# ஜீப் மோதியதில் உயிரிழந்த இளைஞனின் மரணம் தொடர்பில் நீதி கோரி போராட்டம்!

(க.கிஷாந்தன், பி.கேதீஸ்)

தலவாக்கலை நகரில் தீபாவளி தினத்தன்று ஜீப் மோதியதில் உயிரிழந்த இளைஞனின் மரணம் தொடர்பில் நீதி கோரி தலவாக்கலை நகரில் நேற்று இரவு போராட்டம் இடம்பெற்றது. நூற்றுக்கணக்கானோர் ஒன்று கூடியதால் கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

செல்வநாதன் புஸ்பகுமார் (வயது – 28) என்ற இளைஞனே, நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

கடந்த 20 ஆம் திகதி தீபாவளி தினத்தன்று இரவு வேளையில் தலவாக்கலை பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமையில் பிரதான வீதியில் தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு பட்டாசு கொளுத்தி கொண்டிருந்த இளைஞர்கள் குழு ஒன்றில் எஸ்.புஸ்பகுமார் (வயது – 28) என்ற இளைஞனும் இருந்துள்ளார்.



இதன்போது பிரதான பாதையில் வருகை தந்த ஜீப் ஒன்று திடீரென இளைஞர்கள் மீது மோதியுள்ளது.

இதில் இரு இளைஞர்கள் காயம் அடைந்தனர். படுகாயம் அடைந்த குறித்த இளைஞன் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் நுவரெலியாவில் இருந்து நேற்று தலவாக்கலை பகுதியில் உள்ள அவரது சொந்த ஊருக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

சடலம் தலவாக்கலை நகரை வந்தடைந்த பின்பு, போராட்டம் இடம்பெற்றது. குடும்ப உறவினர்கள், நண்பர்கள் உட்பட பெருமளவானோர் சாலை மறியலில் ஈடுபட்டனர். விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. சுமார் அரை மணிநேரத்துக்கு மேலாக போராட்டம் நீடித்தது.

சம்பந்தப்பட்ட சாரதிக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் உறுதியளித்ததையடுத்து நிலைமை சீரானது. உயிரிழந்த இளைஞனின் இறுதிக்கிரியைகள் இன்று இடம்பெற்றன.

# போதைப்பொருள்களுடன் நேற்று மாத்திரம் 1,314 பேர் சிக்கினார்கள்

“முழு நாடுமே ஒன்றாக” தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் நேற்று சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையின் போது பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 1311 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், 1314 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 31 பேர் தடுப்புக்காவல் உத்தரவுகளைப் பெற்றுள்ளனர்.

மேலும், 8 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களிடமிருந்து, 863 கிராம் 137 மில்லிகிராம் ஹெரோயின், 1 கிலோகிராம் 202 கிராம் 247 மில்லிகிராம் ஐஸ், 1 கிராம் 42 மில்லிகிராம் கொக்கெய்ன், 197 கிலோகிராம் 298 கிராம் 971 மில்லிகிராம் கஞ்சா, 50,823 கஞ்சா செடிகள், 6 கிராம் 72 மில்லிகிராம் குஷ்ரக போதைப்பொருள், 20 கிராம் 783 மில்லிகிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1415 போதை மாத்திரைகள் மற்றும் 993 கிராம் 748 மில்லிகிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில் 254 பேர் விசேட சுற்றிவளைப்பில் கைது!

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் நேற்று சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 254 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 150



பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 26 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 21 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

அத்துடன், பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 336 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பட்டிருப்பு தேசிய பாடசாலையில் பிரதமருக்கு அமோக வரவேற்பு

(வி.ரி. சகாதேவராஜா)

நாட்டின் பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹறிணி அமரசூரிய நேற்று சனிக்கிழமை பட்டிருப்பு தேசிய பாடசாலைக்கு விஜயம் செய்தார் .

அதன் போது பாடசாலைச் சமூகத்தினர் அவருக்கு ஆரத்தி எடுத்து திலகமிட்டு அமோக வரவேற்பு அளித்தனர்.

பிரதமருடன் மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான கந்தசாமி பிரபு மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பட்டிருப்பு தொகுதிக்கான அமைப்பாளர் வாணி ஆகியோரும் விஜயம் செய்திருந்தனர்.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரனும் சமூகமளித்திருந்தார்.

இதன்போது பாடசாலையின் தமிழ் இனியம் வாத்தியக் குழு மாணவர்கள் வாத்திய இசையுடன் நடனமாடி பிரதமரையும் ஏனைய அதிகளையும் வரவேற்றுச் சென்றனர்.

பாடசாலையின் முதல்வர் எம்.சபேஸ் குமாரின் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

அவரது தலைமையுரையின் போது, இப்பாடசாலையின் நூற்றாண்டு வரலாற்றில் பிரதமர் ஒருவர் வருகைதந்தது இதுவே முதற்தடவை எனக்குறிப்பிட்டதுடன் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார். மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாட விதானச் சாதனைகள் பற்றி எடுத்துரைத்தார். இச்சாதனைகள் யாவும் பல்வேறு பௌதீகவளப் பற்றாக்குறைகளின் மத்தியிலேயே நிகழ்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக சுமார் 3000 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் 1976 ஆம் ஆண்டு கட்டப்பட்ட சுமார் 200 மாணவர்கள் மட்டுமே அமரக் கூடிய ஒரு ஒன்றுகூடல் மண்டபமே உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் தனது உரையின் போது,

பாடசாலைகளில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இயன்றவரையில் தாம் கருத்தில் கொள்ளப்படும். தற்போதைய கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும். அந்த வகையில் தற்போது அமுல்படுத்தப் படவுள்ள கல்விச் சீர்திருத்தத்தை நடை முறைப்படுத்துவதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழுங்கவேண்டும் என்றார்.

இதன்போது அதிபரால் பிரதமருக்கு ஞாபகச்சின்னம் வழங்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினராலும் பிரதமருக்கு ஞாபகச் சின்னம் வழங்கப்பட்டது.

அத்துடன் 11 ஆம் வகுப்பு மாணவி செல்வி சுரேஸ் கனிஷேகா பிரதமரின் உருவத்தை பென்சில் வர்ணத்தால் வரைந்த ஓவியத்தையும் பிரதமருக்கு வழங்கியிருந்தார். மாணவியை வாழ்த்திய பிரதமர் நன்றி கூறினார்.

நிகழ்வின் இறுதியில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் இனியம் வாத்தியக்குழு மாணவர்கள் பிரதமருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தமிழ் - முஸ்லிம் உறவு

வடக்கில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு 35 வருட நிறைவை நினைவுகூரும் முகமாக, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில், யாழ். தந்தை செல்வா கலையரங்கத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை சில விடயங்களைத் தெரிவித்துள்ளார். அவை கவனிக்கத்தக்கவை.

இந்தக் கருத்துகளைத் தெரிவித்த செல்வின் இரேனியஸ் வெறும் விமர்சகரோ, பார்வையாளரோ அல்லர். அந்தச் சமயத்தில் விடுதலைப் புலிகளின் பக்கத்தில் இயங்கிய சமாதான செயலகத்தில் அரசினுடைய நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டு அங்கிருந்தபடியே செயற்பட்டவர். அந்த வேளையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளில் புலிகள் தரப்பில் இருந்தபடி நிர்வாக ஒழுங்குகளை கவனித்தவர். அதன் காரணமாக புலிகளோடு மிக நெருக்கமாக புரிதலோடு பழகியவர். பல உள் விடயங்களை நெருக்கமாகப் பக்கத்தில் இருந்து அறிந்தவர். அவருடைய கருத்து இந்த விடயத்தில் ஈண்டு நோக்கத்தக்கது. விவகாரங்களில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவராக அவர் கருத்து தெரிவிக்கின்றார். அவற்றை உள்வாங்கி அந்தப் பின்புலத்தில் நோக்குவது பொருத்தமானது.

✯ புலிகளின் தலைவர் பிரபாகரன் கையொப்பமிட்ட ஒரே ஓர் ஆவணம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீமுக்கும் அவருக்குமிடையே கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரான புரிந்துணர்வு ஒப்பந்த ஆவணம் மட்டும்தான்.

✯ இருவருக்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் "பிரபாகரன், இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அனைவரையும் மீண்டும் குடியேறுவதற்கு வருமாறு அழைக்கின்றார்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

✯ ரவூப் ஹக்கீமுடன் புலிகள் நேரடியாகப் பேச்சு நடத்திய போது புலிகள் மிக வலிமையுடனும் அங்கீகரிப்புடனும் நிலை கொண்டிருந்தார்கள். தோற்றுப் போய் அழிவடைய போகின்றோம் என்ற நிலையில் இருந்து அப்போது அவர்கள் பேசவில்லை. சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்டு, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மிகவும் பலமாக இருந்த நாள்களிலேயே அந்தப் பேச்சுகள் இடம்பெற்றன.

✯ அப்போது யாழ்ப்பாண மாவட்டம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத யாழ்ப்பாணத்தில் குடியேறுங்கள் என்று சொல்வதற்கு புலிகளால் முடியாது. அந்தச் சூழலில் தங்களால், மீள குடியேறவுள்ள முஸ்லிம் மக்களுக்கு உத்தரவாதம் தர முடியாது என்பதே புலிகளின் சாராம்சமாக இருந்தது.

✯ முஸ்லிம் மக்கள் மதரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவுப், ஏனைய விடயங்கள்ரீதியாகவும்தனித்துவமானவர்கள். அவர்களது உரிமைகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விடயம் அந்த ஒப்பந்த ஆவணத்தில் தெளிவாக கூறப்படுகிறது.

- இவை இரேனியஸ் செல்வின் சுட்டிக் காட்டும் அம்சங்கள்.

வடக்கு முஸ்லிம்கள் வல்வந்தமாக இடம்பெயர வைக்கப்பட்டமையை மட்டும் ஒரு விவகாரமாக்கி, இப்போது தமிழ் - முஸ்லிம் உறவுகளைக் கொச்சைப்படுத்த முனையும் இன்றைய விமர்சகர்கள், தற்போது இரேனியஸ் செல்வின் குறிப்பிட்ட இந்தக் கருத்துக்களை உள்வாங்கிப் பேசுவது பொருத்தமானது. முக்கியமானது.




# ‘தீதும் நன்றும்’ சிறுகதைத் தொகுதி லண்டனில் அறிமுகம்

விமல் பரம் எழுதிய ‘தீதும் நன்றும்’ சிறுகதைத்தொகுதி அண்மையில் லண்டனில் மண்டபம் நிறைந்த மக்கள் நடுவே அறிமுகம் செய்து வைக்கப் பட்டது.

வணக்கம் லண்டன் அமைப்பின் ஏற்பாட்டில் லண்டனில் இந்த நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

எழுத்தாளரும் பெண்ணியச் செயற் பாட்டாளருமாகிய திருமதி மாதவி சில லீலன் தலைமையில் நிகழ்வு நடை பெற்றது.

வரவேற்புரையை திருமதி சுகுணா சுதாகரன் நிகழ்த்த அறிமுக உரையை திருமதி திருமகள் சிறிபத்மநாதன் நிகழ்த்தினார். தொடர்ந்து நூலின் கதைகளை முன் வைத்து திருமதி. அகல்யா நித்தியலிங்கம் ‘பெண்களின் வாழ்வியல்’ என்ற தலைப்பிலும், திருப்பரங்குன்றன் சுந்தரம்பிள்ளை ‘முதியோர் வாழ்வியல்’ குறித்தும், திருமதி. ஜெயஸ்ரீ சதானந்தன் ‘சமூக வாழ்வியல்’ பற்றியும் தமது உரைகளை ஆற்றினார்கள்.

நூலாசிரியர் தனது ஏற்புரையில் தான் எழுத வந்த சூழல் பற்றியும் தனது கதைகளுக்கான சமூக காரணிகள் பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டு தனது கதைகளுக்கு களம் தந்து வளர்த்து விட்ட பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும், தனது கதைகளைத் தொகுத்து நூல் வடிவில் வெளியீடு செய்த ஜீவநதி பதிப்பகத்துக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இறுதியில் திருமதி சிவாஜினி ஜெயக்குமாரின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புச் சேர்த்தவர் பத்மநாப ஐயர். அந்த நிகழ்வில் தன்னிடமிருந்த நூல்களை வவுனியா பல்கலைகழக நூலகத்துக்கு அவர் அன்பளிப்புச் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.















# மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்க வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வுகள்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் இந்துசமய வளர்ச்சிச் சங்கம் வருடந்தோறும் மன்னார் பாட சாலை மாணவர்க்கிடையே சமய அறி வுப் போட்டிகளை நடத்தி பெறுமதிமிக்க பணப்பரிசில்களையும் வெற்றிச் சான்றி தழ்களையும் வழங்கி வருகிறது. இம் முறையும் 2025 ஆம் ஆண்டுகாகன பரிசளிப்பு விழா நிகழ்வு இடம்பெற்றது.

இந்தப் போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. பணப் பரிசில்களுக்கு நிதி வழங்கி உதவிய சுவிஸ் கௌரியம்பாள் இந்து கலாசார மன்றத்துக்கும் சட்டத்தரணி கதிரமலை ஜெயகாந்தனுக்கும் கொப்பி கள் வழங்கியுதவிய வர்த்தகர் திருவாளர் கள் சங்கர் கணேஸ் பரஞ்சோதி கஜமு கன் மற்றும் விழா செலவுகளுக் காக நிதியுதவி நல்கிய நல் உள்ளங்களுக் கும் மேலும் மதிய உணவை வழங்கிய திருக்கேதீச்சரம் மகா சிவராத்திரி மடத் தாருக்கும் மன்னார் இந்து சமய வளர்ச் சிச் சங்கத்தினர் நன்றி தெரிவித்தனர்.







# வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றத்தை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குக!

## வெளியேற்றப்பட்டு 35 வருட நிறைவில் கோரிக்கை

(வாஸ் கூஞ்ஞ)

வடக்கு முஸ்லிம்கள் வெளியேற் றப்பட்டு 35 வருடங்களாகியுள்ளன. இவர்களின் வெளியேற்றம் ஏன் நடை பெற்றது, அவர்களுக்கான நஷ்ட ஈட்டை யார் வழங்குவது, அவர்களுக்கான நீதி எப்போது வழங்கப்படும், அவர் களின் மீள்குடியேற்றப் பிரச்சினைக்கு என்ன தீர்வு போன்ற விடயங்களை ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை நியமிக்குமாறு வடமா காண மக்கள் சார்பாக கேட்டுக் கொள் கிறோம்.

இவ்வாறு முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் சட்டமானியுமான பி.எம். முஜீபுர் றஹ்மான் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத் தின் இறுதி வாரத்தில் வடமாகாண முஸ்லிம்கள் ஆயுத முனையில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.



35 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இதனை நினைவுகூறும் நிகழ்வு மன்னார் முசலிப் பிரதேசத்தில் நடை பெற்றது.

இதன்போது முக்கிய கல்வியலா ளர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், முக்கிய பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போதே இத்தீர்மானம் நிறைவே வற்றப்பட்டதாக முஜீபுர் றஹ்மான் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

இந்த 35 வருட அகதி வாழ்வில் பல இழப்புக்களை சந்தித்துள்ளார்கள். அதிலிருந்து இன்னும் அவர்கள் மீள வில்லை. அவர்களில் 55 வீதமான வர்களே மீள்குடியேறி இருக்கிறார்கள். மீதமானவர்கள் மீள்குடியேற வேண்டி யுள்ளது. அந்த மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்துமாறும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இறுதியாக, ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமித்தால் பல பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு கோரி அனைத்து மக்க ளும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புமாறு கோரி ஜனநாயக ரீதியாக எமது செயற் பாட்டை முன்கொண்டு செல்கிறோம்.- என்றார்.



# கடற்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவில் அநுராதபுரத்தில் விசேட பூசை வழிபாடுகள்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

டிசெம்பர் மாதம் 09 ஆம் திகதி இலங்கை கடற்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவாகும். இதனை முன்னிட்டு கடற்படை கொடிக்கு ஆசிர்வாதம் பெறும் கொடி ஆசீர்வாத பூஜை மற்றும் கஞ்சுக பூஜை என்பன அநுராதபுரத்தில் கடற்படை பௌத்த சங்கத்தின் அனுசரணையில் வைஸ் அட்மிரல் கான்சன பானகொடவின் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கடற்படை சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி அனுஷா பானகொடவும் கலந்து கொண்டார்.

இலங்கை கடற்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், கடற்படைக்கு ஆசிர்வாதம் பெறுவதற்காக கடற்படை பல மத நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வின் பௌத்த சமய வழிபாடுகளை ஆரம்பிக்கும் வகையில் கடற்படைத் தளபதி கடந்த வியாழக்கிழமை (30) மாலை ருவன்வெளி சேய விஹாரவாசி, மஹா பிரிவேனாவின் பிரதி பீடாதிபதி ராஜகீய பண்டிதர் வணக்கத்துக்குரிய குடாகல ஞானவிமல தேரரை சந்தித்து அவரது ஆசிகளைப் பெற்ற பிறகு, கடற்படை பௌத்த சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கஞ்சுக பூஜை, பௌத்த மத நடைமுறைகளுக்கு இணங்க ருவன்வெளி மகா சேயவிற்கு முன்பாக நடைபெற்றது.

அங்கு, கடற்படைத் தளபதி மற்றும் மூத்த அதிகாரிகளால் பௌத்தக் கொடி, ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. அந்தக் கொடியானது ருவன்வெளி மகா சேயவை சுற்றி அணிவிக்கப்பட்டதன் பின்னர், இலங்கை கடற்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, வணக்கத்துக்கு உரிய மகா சங்கத்தினரால் கடற்படைத் தளபதிக்கும் முழு கடற்படைக்கும் ஆசீர்வாதங்கள் தெரிவிக்கப்பட்டது.

அறுநாள் வெள்ளிக்கிழமை (31) காலை, கடற்படைக் கொடிகள் வண்ணமயமான ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு, ஜய ஸ்ரீ மகா போதியின் ஆசிகளைப் பெறுவதற்காக ஜய ஸ்ரீ மகா போதி முன் வைக்கப்பட்டன. பின்னர், கடற்படைக் கொடிகளுக்கு ஆசீர்வாதம் பெற பிரித் ஓதப்பட்டு, ஜய ஸ்ரீ மகா போதியின் ஆசிகள் பெற பிரார்த்தனைகள் செய்யப்பட்டன.



# மட்டு. கல்வியியல் கல்லூரிக்கு பிரதமர் ஹரிணி நேற்று விஜயம்!







(வி.ரி.சகாதேவராஜா)

பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று (01) சனிக்கிழமை மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி த.கணேசரத்தினம் மற்றும் உப பீடாதிபதிகளுடனும் ஆசிரிய மாணவர்களுடனும் சிநேக பூர்வமாக கலந்துரையாடினார்.

கல்லூரியின் பௌதீக வள வசதிகளை நேரடியாக பார்வையிட்டார்.

இதன்போது பீடாதிபதி கணேசரெத்தினம் கல்லூரியின் குறை நிறைகள் தொடர்பாக பிரதமருக்குத் தெளிவுப் படுத்தினார்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் 135 குடும்பங்களுக்கு அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கல்

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 135 குடும்பங்களுக்கு 3 லட்சத்து 71 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருளான அரிசி வழங்கப்பட்டது.

குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்ப 15கிலோ, 12கிலோ, 10கிலோ,07 கிலோ என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இவை வழங்கப்பட்டன.

இவ் உதவித் திட்டத்தை சந்நிதியான்ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கினார்.

இந்த உதவித் திட்டம் மாதாந்தம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச கல்வியியலாளர் மாநாட்டில் பங்கேற்க கல்வியாளர் இல்ஹாம் மரிக்கார் கனடாவுக்கு!

(றிபாஸ்)

உலகளாவிய கல்வி மேம்பாடு, மாணவர் பரிமாற்றம், மற்றும் புதுமையான கல்வி அணுகுமுறைகள் குறித்து விவாதிக்க ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் இந்த Canadian Bureau for International Education (CBIE) மாநாட்டில் பங்கேற்பது கல்வித் துறையில் ஒரு சிறப்பான வாய்ப்பாகக் கருதப்படுகிறது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இல்ஹாம் மரிக்கார் தற்போது கனடாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அவரின் பங்கேற்பு, இலங்கையின் கல்வித் துறைக்கு ஒரு பெருமை சேர்க்கும் நிகழ்வாக கல்வி வட்டாரங்கள் பாராட்டியுள்ளன. இது சர்வதேச அளவில் இலங்கை கல்வியாளர்களின் திறமை மற்றும் பங்களிப்பை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய முன்னேற்றமாகக் குறிப்பிடப்படுகிறது.



# குடும்பத்தின் வீராங்கனைகள் தேசிய இல்லத்தரசிகள் தினம்!

இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு வீட்டில் உள்ள ஒவ்வொருவரின் தேவையையும் பூர்த்தி செய்து தங்களுடைய இல்லத்தைக் கோயிலாக மாற்றும் இல்லத்தரசிகளுக்கான தினம் நவம்பர் 3 ஆம் திகதியாகும்.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 3 ஆம் திகதி தேசிய இல்லத்தரசி தினமாகக் கொண்டாடப்படுகிறது. குழந்தைகளையும், வீட்டையும் நன்கு கவனித்துக்கொள்ளும் அம்மாக்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக இந்த நாள் கொண்டாடப் படுகிறது.

இந்தத் தினம் யாரால் உருவாக்கப்பட்டது என்று தெரியாது . ஆனால், கடின உழைப்புக்கு மதிப்பளிக்கப்படாத ஒரு இல்லத்தரசியால் இந்த நாள் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இந்த நாள் மற்ற விடுமுறை நாள்களைப் போல் இன்னும் பிரபலமாகவில்லை என்றாலும் ஒவ்வொரு ஆண்டும் இல்லத்தரசிகள் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் மற்ற விடுமுறை நாள்களைப் போல் இன்னும் பிரபலமாகவில்லை என்றாலும் ஒவ்வொரு ஆண்டும் இல்லத்தரசிகள் தினம் கொண்டாடப்படுகிறது.

இன்றைய ஒரு நாள் சமைத்தல், வீட்டை சுத்தம் செய்தல், குழந்தைகளைப் பராமரித்தல் போன்ற அனைத்து வேலைகளையும் கணவரோ அல்லது பிள்ளைகளோ பொறுப்பேற்று இல்லத்தரசிகளுக்கு ஓய்வு கொடுப்பது சிறப்பாக இருக்கும்.

‘நான் என்றுமே நேரம் தவறி அலுவலகம் வந்ததில்லை.’ ‘அலுவலகம் வந்தபின்பு நான் வீட்டைப் பற்றி நினைப்பதேயில்லை.’ ‘என் குழந்தைகள் நல்ல நடத்தையுடன் இருப்பதுடன், நன்றாகவும் படிக்கிறார்கள்.’ ,‘வீட்டிற்குத் தேவையான மாத சாமான்கள், மின்சாரக் கட்டணம், கைபேசி கட்டணம், தொலைபேசி கேபிள் கட்டணம் எதைப் பற்றியும் நான் கவலைப்படுவதில்லை. அவை நேரம் தவறாமல் நடந்து விடுகின்றன.’

இவ்வாறு மார் தட்டிச் சொல்லும் ஆண்கள் சற்றே நினைத்துப் பார்க்க வேண்டும். இவற்றை எல்லாம் செய்வனே நடத்துவது யார்? இல்லத்தரசிகள் தானே.

இல்லத்தரசி தினம் என்பது நம்முடைய அம்மாக்கள், மனைவியர் மற்றும் சகோதரிகள் என்று வீட்டின் முதுகெலும்பாக விளங்கும் அனைவரையும் நேசிக்கவும், அவர்களை மதிக்கவும், வீட்டை ஒரு இனிய இல்லமாக உணர வைக்கும் அவர்களின் அர்ப்பணிப்புக்காக அவர்களைப் கௌரவிக்கவும் கட்டாயம் கொண்டாடப்பட வேண்டும்.



பானுஷா நிமல்,
ஊடககற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

குடும்பம் என்ற வண்டியின் அச்சாணியாகத் திகழும் இல்லத்தரசிகள் வீட்டு வேலை, வெளி வேலை என அனைத்தையும் சிரமம்பாராமல் செய்து சம்பளம் எதுவும் இல்லாமல் குடும்ப நலன் கருதி வீட்டில் உள்ளவர்களின் சந்தோசத்துக்காக உழைக்கும் போது இந்த ஒரு நாளிலாவது அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

இதுபோக, சமையல் வேலை என்பது பெரியதா? அன்றாடம் செய்வது தானே என்பவர்கள் சற்று சிந்திக்க வேண்டும். ஒரு நாளைக்கு காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை உணவு. வாரத்துக்கு 21 வேளைக்கு உணவு தயார் செய்ய வேண்டும். எல்லா வேளைகளிலும், ஒரே மாதிரியான உணவு இல்லாமல் பல்வேறு உணவு வகைகள் செய்ய வேண்டும். இவற்றை செய்வதற்குத் தேவையான காய், கறிகள் மற்றும் மளிகைச் சாமான்கள் ஆகிய மூலப் பொருள்கள் எத்தனை தேவைப்படும் என்று அறிந்து கொள்முதல் செய்ய வேண்டும். இந்த திட்டமிடுதலுக்கு உதவுவது மனம் என்ற அவளுடைய கணினி.

உணவில் சேர வேண்டிய உப்பு, புளி, காரம் சரியான அளவுகள் இருக்க, இல்லத்தரசி எடைக்கருவியை உபயோகிப்பதில்லை. அவளின் மனம் மற்றும் கைதான் அவள் நம்புகின்ற எடைக்கருவி.

ஒரு குடும்பத்தில் குழந்தைகள் நல் ஒழுக்கத்துடன் வளர்ந்து நன்றாகப் படிப்பவர்களாக இருந்தால், அதற்கு முக்கிய காரணம் அவர்களை வழிநடத்தும் இல்லத்தரசியான அவர்கள் தாயார். இவர்கள் தான் குழந்தையின் முதல் ஆசிரியர் என்று சொல்லலாம்.

பொதுவாக, குடும்பத்தில் எல்லோரும் ஒன்றாக வெளியே சென்று வந்தால் வீடு திரும்பியவுடன் மற்றவர்கள் ஓய்வெடுக்க இருக்கைகள் தேட இல்லத்தரசிகள் நுழைவது சமையலறைக்கு. அவர்களுக்குத் தெரியும் களைத்து வந்துள்ள குடும்பத்தினர் தேநீர் கேட்பார்கள் என்று. அவளும் நம்முடன் வந்தாளே அவளுக்கு களைப்பு இருக்காதா என்று ஒருவரும் கவலைப்படுவதில்லை.



வீடு என்பது இரும்பு, செங்கல், மண் வைத்து கட்டப்பட்டது. அந்த வீடு இல்லம் என்ற பெருமையை அடைவது இல்லத்தரசிகளால். தேசிய இல்லத்தரசிகள் தினத்தில் மட்டும் அவர்களைக் கொண்டாடிப் பரிசளிப்பதை விட சீரான வாழ்க்கைக்கு அவர்களின்பங்கை உணர்ந்து பால்நிலை சமத்துவத்துடன் அவர்கள் செய்யும் பணிகள் சிலவற்றைப் பகிர்ந்து கொண்டு அனுசரணையாக இருப்பது நல்லதல்லவா?



# முஸ்லிம் பெண்கள் சார்ந்த சட்டங்களும் சமூகவியல் சவால்கள்

முஸ்லிம் சமூகத்தில் பெண்களின் நிலையைத் தீர்மானிப்பதில் குடும்பச் சட்டங்களுக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை போன்ற முக்கிய வாழ்க்கைச் சம்பவங்கள் மத அடிப்படையிலான தனிப்பட்ட சட்டங்களின் கீழ் நடைபெறுவதால், அவற்றில் பெண்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் சமூக முன்னேற்றத்தின் அளவுகோலாகக் கருதப்படுகின்றன. எனவே, முஸ்லிம் பெண்களைச் சார்ந்த சட்டங்கள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை ஆராய்வது மிக முக்கியம்.

முதலில், இந்தியாவின் Triple Talaq விவகாரம் முக்கிய எடுத்துக்காட்டாகும். பாரம்பரியமாக, கணவன் மூன்று தடவை "தலாக்" எனச் சொல்லியவுடன் திருமணத்தை முடித்து விடும் நடைமுறை பெண்களுக்கு அநீதியானதாகக் கருதப்பட்டது. இதனால், இந்திய நாடாளுமன்றத்தில் நீண்ட கால விவாதத்துக்குப் பின், 2019 ஆம் ஆண்டில் Muslim Women (Protection of Rights on Marriage) Act என்ற சட்டம் கொண்டு வரப்பட்டு, Triple Talaq முறையை சட்டவிரோதமாக அறிவித்தது. இதன் மூலம், முஸ்லிம் பெண்களுக்கு திருமண வாழ்வில் குறைந்தபட்ச பாதுகாப்பு கிடைக்க வழி அமைந்தது.

ஆனாலும், இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன. காரணம், இது மத அடிப்படையிலான குடும்பச் சட்டங்களின் சுதந்திரத்தை பாதிக்கிறது என்பதே. இருந்தாலும், பெண்கள் உரிமை அமைப்புகள் இதை வரவேற்றன. இவ்வாறு, நாடாளுமன்ற விவாதங்களில் மத சுதந்திரமும் பெண்கள் உரிமைகளும் இடையே சமநிலை ஏற்படுத்துவது ஒரு சவாலாக மாறியது.

இதனுடன் தொடர்பாக, இந்தியாவில் பலமுறை "ஒற்றுமை சிவில் சட்டம்" (Uniform Civil Code) என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. அனைத்து மதங்களுக்கும் ஒரே மாதிரியான குடும்பச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற வாதம் எழுப்பப்படுகின்றது. ஆனால், இதற்கு முஸ்லிம் சமூகத்தில் கடும் எதிர்ப்புகள் எழுகின்றன. காரணம், தனித்துவமான மதச் சட்டங்கள் அழிக்கப்படக் கூடாது என்பதே. ஆகவே, பாராளுமன்ற விவாதங்களில் இந்தப் பிரச்சினை மீண்டும் மீண்டும் மையக்கருத்தாகிறது.

இதேபோல் இலங்கையிலும் முஸ்லிம் பெண்கள் சார்ந்த சட்டங்கள் நீண்ட காலமாக விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றன. 1951 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட Muslim Marriage and Divorce Act (MMDA) படி, முஸ்லிம் பெண்களின் திருமணத்துக்கு அவர்களின் ஒப்புதல் அவசியம் இல்லாமல், "வலி" எனப்படும் ஆண் பாதுகாவலரின் ஒப்புதலே போதுமானதாகக் கருதப்படுகிறது. மேலும், திருமண வயது 12 ஆகக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதும், பெண்கள் தங்கள் திருமணப் பத்திரத்தில் கையொப்பமிட முடியாத நிலையும் கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

இதோடு, தலாக் முறையிலும் பாலின அடிப்படையிலான பாகுபாடு காணப்படுகிறது. கணவன் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் "தலாக்" அறிவித்து விவாகரத்து செய்யக் கூடிய நிலையில், பெண் விவாகரத்து பெற பல சிக்கலான நடைமுறைகளைக் கடக்க வேண்டியுள்ளது. இதனால், இலங்கை முஸ்லிம் பெண்கள் தொடர்ந்து சட்ட திருத்தங்களை கோரியும், போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், இலங்கை நாடாளுமன்றத்திலும் இந்த பிரச்சினை மீண்டும் மீண்டும் விவாதத்துக்குள்ளாகிறது. 2022 இல் அரசு MMDA திருத்தங்களை ஆராய்ந்து பரிந்துரைக்கக் குழுவை நியமித்தது. அந்தக் குழு பெண்களின் ஒப்புதல், திருமண வயது உயர்த்தல், வாரிசுரிமை சமமாக வழங்கல், Quazi நீதிமன்றங்களில் பெண்கள் பங்கேற்பு போன்ற பல மாற்றங்களை முன்வைத்தது. ஆனால், பல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இத்தகைய மாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால், பெண்கள் உரிமை அமைப்புகள் "R+LetherSign" போன்ற இயக்கங்களை நடத்தி, முஸ்லிம் பெண்கள் தங்களின் திருமணத்தில் கையொப்பமிட உரிமை பெற வேண்டும், குழந்தை திருமணத்தை தடுக்கும் விதத்தில் வயது உயர்த்தப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை நாடாளுமன்றத்துக்கும் சமூகத்துக்கும் வலியுறுத்தினர். இது, சட்டமன்றத்திலும் சமூகத்திலும் தீவிர விவாதங்களுக்கு வழிவகுத்தது.

தொடர்ச்சி▼

# முஸ்லிம் பெண்கள் சார்ந்த சட்டங்களும் சமூகவியல் சவால்கள்

தொடர்ச்சி▲

மேலும், இலங்கையில் முகமூடி (face covering) தொடர்பான சட்டமும் முஸ்லிம் பெண்களுக்குப் பெரிய விவகாரமாக மாறியது. 2021 ஆம் ஆண்டில், பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு முழு முகமூடியைத் தடை செய்யும் விதமான சட்டம் கொண்டு வரப்பட, நாடாளுமன்றத்தில் இது தீவிரமாக விவாதிக்கப்பட்டது. பெண்களின் மத சுதந்திரத்தை இது மீறுகிறது என ஒரு பக்கம் கூற, நாட்டின் பாதுகாப்புக்காக அவசியம் என அரசு வாதித்தது.

இவ்வாறு, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் முஸ்லிம் பெண்கள் சார்ந்த சட்டங்கள் நாடாளுமன்ற விவாதங்களில் தொடர்ந்து முக்கிய இடம் பெறுகின்றன. ஒருபுறம் மத அடையாளம் மற்றும் பாரம்பரியம் காக்கப்பட வேண்டும் என்ற வாதங்களும், மறுபுறம் பெண்கள் சம உரிமைகளை பெற வேண்டும் என்ற கோரிக்கைகளும் மோதிக் கொண்டே வருகின்றன.

முஸ்லிம் பெண்களைச் சார்ந்த சட்டங்கள் வெறும் மத அடிப்படையிலான விவாதங்களாக மட்டும் அல்லாது, சமூக நீதி, பாலின சமநிலை, மனித உரிமைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கிய பரந்த அரசியல் பிரச்சினையாகவே நாடாளுமன்றத்தில் காணப்படுகின்றன. ஆகவே, சட்ட சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் போது, மத சுதந்திரமும் பெண்கள் உரிமைகளும் சமநிலையாகக் கவனிக்கப்பட்டால் தான் முஸ்லிம் பெண்களின் எதிர்காலம் உண்மையிலேயே பாதுகாக்கப்படும்.

முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் எப்போதுமே குடும்பத்தின் அடிப்படைக் குருதியாய் கருதப்பட்டுள்ளனர். இருப்பினும், உலகமயமாக்கல், கல்வி பரவல், சமூக மாற்றங்கள் ஆகியவற்றின் தாக்கத்தால் அவர்களின் வாழ்க்கையில் புதிய பரிமாணங்கள் கள் உருவாகியுள்ளன. இதனால், அவர்களின் நிலையைப் பற்றி ஆராயும் போது சவால்களும் சாத னைகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பதை காண முடிகிறது.

முதலில், கல்வித் துறையை எடுத்துக் கொள்ளும்போது, முஸ்லிம் பெண்கள் பல சவால்களை எதிர் கொள்கின்றனர். மதக் கல்விக்கும் பொதுக் கல்விக்கும் இடையே சமநிலை இல்லாத நிலை, பல இடங்களில் பெண்கள் உயர் கல்வி பெறுவதில் தடையாகிறது. மேலும், சமூக மனப்பான்மை மற்றும் குடும்பக் கட்டுப்பாடுகள் காரணமாக, பள்ளி மட்டத்திலேயே கல்வி நிறுத்தப்படுவதாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. ஆனால், இதற்கு மாறாக, நகர்ப்புறங்களில் கல்வியில் அதிக பங்கேற்பு காணப்படுவதால், சமூக நிலைமையில் வேறுபாடு இருப்பதும் உண்மையாகும்.

அதேபோல், வேலைவாய்ப்பு துறையும் முக்கிய சவாலை வெளிப்படுத்துகிறது. பாரம்பரியக் கருத்துக்களும், பெண்கள் வேலைக்கு செல்வதைத் தவிர்க்கும் மனநிலையும் காரணமாக, முஸ்லிம் பெண்கள் இன்னும் அதிகளவில் வீட்டுக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்படுகின்றனர். இதனுடன், வேலை இடங்களில் பாதுகாப்பின்மை மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடு ஆகியவையும் அவர்கள் முன்னேற்றத்துக்கு இடையூறாகின்றன. இருப்பினும், கல்வியறிவு பெற்ற பெண்கள், ஆசிரியர், மருத்துவர், வங்கி அதிகாரி போன்ற துறைகளில் தங்களுக்கென தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளனர்.

இதனுடன் தொடர்பாக, திருமணம் மற்றும் குடும்பப் பொறுப்புகளும் குறிப்பிடத்தக்க தடையாகின்றன. குறிப்பாக, இளம் வயதிலேயே திருமணத்துக்கு உட்படுத்தப்படுவது, கல்வியையும் தொழில் முன்னேற்றத்தையும் பாதிக்கிறது. மேலும், குடும்பப் பொறுப்புகள் பெண்களை முழுமையாக சுய முன்னேற்றத்தில் ஈடுபட விடாமல் செய்கின்றன. எனினும், சில பெண்கள் குடும்ப பொறுப்புகளையும் தொழிலையும் சமநிலைப்படுத்தி முன்னுதாரணமாக நிற்பது, சமூகத்தில் புதிய பார்வையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு சவால்கள் நிறைந்த சூழ்நிலையில் கூட, முஸ்லிம் பெண்களின் சாதனைகள் குறிப்பிடத்தக்கவை ணயாகின்றன. குறிப்பாக, பல்கலைக்கழகக் கல்வியில் அதிக பங்கேற்பு, தொழில் முனைவோர் முயற்சிகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபாடு ஆகியவற்றால் அவர்கள் தங்கள் திறமையை நிரூபித்து வருகின்றனர். அதோடு, சமூக மற்றும் அரசியல் துறைகளிலும் அவர்கள் தங்கள் பங்களிப்பை அதிகரித்து வருகின்றனர். உள்ளூராட்சி சபைகளிலும், சமூக சேவை அமைப்புகளிலும் முஸ்லிம் பெண்களின் குரல் வலுப்பெறுவது, அவர்களின் முன்னேற்றத்தை வெளிப்படுத்துகிறது.

இவ்வனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் இன்னும் நீங்காமல் இருந்தாலும், சாதனைகள் சமூக மாற்றத்துக்கான நம்பிக்கையை உருவாக்குகின்றன. கல்வி, வேலைவாய்ப்பு, சமூக பங்கேற்பு போன்ற துறைகளில் அவர்கள் பெற்ற முன்னேற்றம் நாளைய தலைமுறைக்குப் பாதை வகுக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, அரசு, சமூக அமைப்புகள், குடும்பம் ஆகியவை இணைந்து செயல்பட்டால், முஸ்லிம் பெண்களின் எதிர்காலம் இன்னும் பிரகாசமாகும்.

முஸ்லிம் பெண்கள் வரலாற்றில் பல்வேறு தடைகள் மற்றும் சமூக எதிர்ப்புகளை சந்தித்தபோதிலும், தங்களின் உழைப்பாலும் உறுதியாலும் பல துறைகளில் சிறந்து விளங்கியுள்ளனர். அவர்களின் வாழ்க்கைச் சவால்களையும் சாதனைகளையும் ஆராய்வது சமூக வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு செய்யும்.

கல்வித் துறையில் முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் முக்கியமானவை. குறிப்பாக சில மரபுவழி சமூகங்களில் பெண்களின் உயர் கல்வி பயில்வதற்கு எதிர்ப்பு காணப்படுகிறது. பெண்கள் பள்ளிப் படிப்பைத் தாண்டி பல்கலைக்கழகங்களுக்கு செல்லக் கூடாது என்பது போன்ற கருத்துக்கள் இன்னும் நிலவுகின்றன.

இதனால், பல திறமையான பெண்கள் தங்கள் கல்வி கனவுகளை பாதியிலேயே கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். உதாரணமாக, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பல பெண் மாணவிகள் "குடும்பக் கட்டுப்பாடு" காரணமாக மேற்படிப்பு தொடர முடியாமல் உள்ளனர்.

அதே சமயம், கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்திய சில முஸ்லிம் பெண்கள் பல்கலைக்கழக விருதுகள், பன்னாட்டு உதவித் தொகைகள் போன்றவற்றைப் பெற்று சமூகத்தில் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். இந்தியாவில் Dr. Najma u;eptulla மற்றும் இலங்கையில் Ferial Ashraff போன்றோர் கல்வியிலும் அரசியலிலும் சாதித்தவர்கள்.

வேலைவாய்ப்பு துறையில் முஸ்லிம் பெண்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். சில இடங்க

தொடர்ச்சி▼

# முஸ்லிம் பெண்கள் சார்ந்த சட்டங்களும் சமூகவியல் சவால்கள்

தொடர்ச்சி▲

ளில் அவர்கள் வேலைக்குச் செல்வதை குடும்பம் அனுமதிக்காது. "பெண்களின் இடம் வீடு" என்ற கருத்து இன்னும் பல குடும்பங்களில் ஆதிக்கம் செலுத்துகிறது.

அதேவேளை, வேலைக்கு சென்ற பெண்கள் பல இடங்களில் பாகுபாடுகளையும் அவமதிப்புகளையும் சந்திக்கிறார்கள். குறிப்பாக ஹிஜாப் அணிந்த பெண்கள் வேலை நேர்காணல்களில் புறக்கணிக்கப்படுவதும், தகுதியான வேலைகள் கிடைக்காமல் தவிப்பதும் காணப்படுகிறது.

ஆனால், இதனையும் மீறி முஸ்லிம் பெண்கள் மருத்துவம், கல்வி, வங்கி, தகவல் தொழில்நுட்பம் போன்ற பல துறைகளில் முன்னேறி வருகிறார்கள். இலங்கையில் பல மருத்துவமனைகளில் முஸ்லிம் பெண் மருத்துவர்கள் சிறந்த சேவை செய்து வருவது இதற்குச் சான்று.

அரசியல் துறையிலும் முஸ்லிம் பெண்கள் சவால்களை சந்தித்துள்ளனர். பொதுவாக அரசியலை ஆண்கள் மட்டுமே செய்யக் கூடிய துறை என்ற எண்ணம் சமூகத்தில் அதிகம் காணப்படுகிறது. இதனால், பெண்கள் தேர்தலில் போட்டியிடும்போது கூட அவர்களே குடும்ப மற்றும் சமூக எதிர்ப்புகளுக்கு உள்ளாகின்றனர்.

இருப்பினும், சிலர் இந்த எதிர்ப்புகளை உடைத்து முன்னேறியுள்ளனர். இந்தியாவில் சைய்ரா பானு, இலங்கையில் பைசர் முஸ்தபா குடும்பத்தைச் சேர்ந்த Ferial Ashraff போன்றோர் அரசியலில் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளனர்.

விளையாட்டு துறையில் முஸ்லிம் பெண்கள் மிகுந்த தடைகளை சந்திக்கிறார்கள். உடை விதிமுறைகள், சமூக விமர்சனங்கள் ஆகியவை அவர்களை பின்தள்ளுகின்றன. உதாரணமாக, கிரிக்கெட் அல்லது அதிரடி விளையாட்டுகளில் பங்கேற்கும் முஸ்லிம் பெண்கள் சமூகத்தால் விமர்சிக்கப்படுகிறார்கள்.ஆனால், ஹிஜாப் அணிந்து விளையாடும் முஸ்லிம் பெண்கள் பன்னாட்டு அளவில் பாராட்டைப் பெற்றுள்ளனர். Ibtihaj Muhammad (அமெரிக்கா) ஒலிம்பிக்கில் ஹிஜாப் அணிந்து பங்கேற்று வெற்றி கண்டது முஸ்லிம் பெண்களின் உலகளாவிய சாதனையின் அடையாளமாகும்.

சமூக சேவை மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புகளில் முஸ்லிம் பெண்கள் சிறப்பாக பங்கு கொண்டு வருகின்றனர். பலர் கல்வி, சுகாதாரம், பெண்கள் உரிமைகள், அனாதைகள் பாதுகாப்பு போன்ற துறைகளில் சமூக முன்னேற்றத்துக்காக உழைக்கின்றனர்.

ஆனால், சமூகத்தில் சிலர் இவர்களின் பங்களிப்பை மதிக்காமல், பெண்கள் "வெளியில் சென்று சேவை செய்யக்கூடாது" என்ற கருத்துகளை முன்வைக்கின்றனர். இதனால், பெண்கள் தங்கள் சேவையை முழுமையாக வெளிப்படுத்த முடியாமல் தடுக்கப்படுகின்றனர்.

முஸ்லிம் பெண்கள் தங்கள் வாழ்வியலில் குடும்பத்துக்குள் கூட சவால்களைச் சந்திக்கின்றனர். சிலர் சிறிய வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர். இதனால், அவர்களின் கல்வியும் கனவுகளும் பாதிக்கப்படுகின்றன.

மேலும், விவாகரத்து சட்டங்களில் பெண்கள் பெரும் அநீதியையும் சிக்கல்களையும் எதிர்கொள்கின்றனர். "தலாக்" முறையில் ஆண்கள் எளிதில் பிரிவை ஏற்படுத்தக் கூடிய நிலையில், பெண்களுக்கு விவாகரத்து பெற கடினமாகிறது.

இன்னொரு பக்கம், இத்தகைய சவால்களை எதிர்த்து பல பெண்கள் சமூகத்தில் உரிமை இயக்கங்களை நடத்தி வருகின்றனர். இலங்கையில் "Let u;er Sign" போன்ற இயக்கங்கள் முஸ்லிம் பெண்கள் உரிமைக்காக நடத்தப்பட்ட முக்கிய இயக்கங்களில் ஒன்றாகும்.

மேலும், சமூக ஊடகங்கள் முஸ்லிம் பெண்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்கியுள்ளன. ஆன்லைன் வியாபாரம், டிஜிட்டல் கல்வி, பிளாக்கிங் போன்ற துறைகளில் அவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆனால், இணையத்திலும் முஸ்லிம் பெண்கள் சைபர் தொல்லைகள், மத அடிப்படையிலானதாக்குதல்கள்போன்றவற்றைச் சந்திக்கிறார்கள். இதுவும் அவர்களின் சுதந்திரத்தைத் தடுக்கின்ற பெரிய சவாலாக மாறியுள்ளது. முடிவாகச் சொல்லப் போனால், முஸ்லிம் பெண்கள் கல்வி, வேலை, அரசியல், விளையாட்டு, சமூக சேவை, ஆன்லைன் தொழில் ஆகிய அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காணத் தொடங்கியுள்ளனர். இருந்தாலும், பாகுபாடு, சமூக எதிர்ப்பு, சட்ட அநீதி, மதக் கட்டுப்பாடு ஆகியவை அவர்களின் சுதந்திரமான முன்னேற்றத்துக்கு இன்னும் தடையாகவே இருக்கின்றன.

ஆகவே, முஸ்லிம் பெண்களின் உண்மையான வளர்ச்சி சமூக மன நிலையின் மாற்றத்தாலும், சட்டப் பாதுகாப்பாலும், சம வாய்ப்புகளை வழங்கும் அரசியல் விருப்பத்தாலும் மட்டுமே சாத்தியமாகும்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் நிலைமைகள் எனும் போது இலங்கையில் முஸ்லிம் பெண்களின் வாழ்க்கை பெரும்பாலும் Muslim Marriage and Divorce Act (MMDA) எனப்படும் முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டத்தோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் 1951 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வந்தாலும், பெண்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான பல பாகுபாடுகளை உள்ளடக்கியதாக நீண்ட காலமாக விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறது.

சட்டத்தின் கீழ் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எனும் போது, திருமண வயது – பொதுச் சட்டப்படி பெண்களுக்கு திருமண வயது 18 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் MMDA-வின் கீழ், பெற்றோரின் அனுமதி இருந்தால் சிறுமிகளுக்கு திருமணம் அனுமதிக்கப்பட்டு வந்தது. இதனால் குழந்தைத் திருமணம் பிரச்சினையாகி, முஸ்லிம் பெண்கள் கல்வியைத் தொடர முடியாமல், சிறுவயதிலேயே குடும்பச் சுமைகளை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தலாக் (விவாகரத்து) – முஸ்லிம் ஆண்களுக்கு ஒருதலைப்பட்சமாக "தலாக்" கூறி விவாகரத்து செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பெண்களுக்கு, "குலா" (Khula) அல்லது "பசாக்" (Fasakh) வழியாக நீதிமன்றத்தில் சான்றுகள் சமர்ப்பித்து மட்டுமே விவாகரத்து பெற முடியும். இதனால் பெண்கள் நீண்ட கால நீதிமன்றப் போராட்டத்தையும் சமூக அவமானத்தையும் எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவாகிறது.

காதின் நீதி – பல சமயங்களில் முஸ்லிம் காதி நீதிமன்றங்களில் (Quazi Courts) பெண்கள் தங்கள் வழக்குகளை வாதிட வழக்கறிஞர்களை நியமிக்க முடியாது. இதனால் சட்ட அறிவில்லாத பெண்கள் தங்கள் உரிமைகளைத் தக்க முறையில் காக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

தொடர்ச்சி▼

# முஸ்லிம் பெண்கள் சார்ந்த சட்டங்களும் சமூகவியல் சவால்கள்

**தொடர்ச்சி▲**

சமூக பாகுபாடுகள் எனும் போது முஸ்லிம் பெண்கள் கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் பங்கேற்பு போன்ற துறைகளிலும் பாகுபாடுகளை எதிர்கொள்கின்றனர்.

பெரும்பாலான முஸ்லிம் குடும்பங்களில் மகள்களுக்கு உயர்கல்வி அளிக்கப்படாமல், பள்ளிக் கல்விக்குப் பின் திருமணம் செய்யும் வழக்கம் தொடர்கிறது.

பெண்கள் சமூக ரீதியான கட்டுப்பாடுகளால், குறிப்பாக வணிகம், ஊடகம், அரசியல் போன்ற துறைகளில் நுழைய முடியாமல் தடுக்கப்படுகிறார்கள்.

சமூக எதிர்ப்பு – தலாக் அல்லது குடும்பச் சிக்கல்களில் நீதி கேட்கும் பெண்கள் பெரும்பாலும் "சமூகம் எதிர்த்து நிற்பவர்கள்" என குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

அண்மைய நாடாளுமன்ற விவாதங்களை பார்ப்போமிடத்து, சமீப காலங்களில், முஸ்லிம் பெண்களின் உரிமைகள் குறித்த விவாதங்கள் நாடாளுமன்றத்திலும் ஊடகங்களிலும் பெரிதும் பேசப்பட்டன.

பெண்கள் அமைப்புகள் மற்றும் உரிமை இயக்கங்கள், ஆஆனுயுவில் உள்ள குறைபாடுகள் மாற்றப்படாமல் இருந்தால், முஸ்லிம் பெண்கள் தொடர்ந்து அநீதி அனுபவிக்க வேண்டிய நிலைமை தொடரும் என எச்சரித்தன.

உதாரணங்களாக, திருகோணமலை மாவட்டத்தில் சிறுமியாக திருமணமான ஒரு பெண், 16 வயதிலேயே இரு குழந்தைகளின் தாயானார். கல்வி முற்றிலும் நிறுத்தப்பட்டு, வாழ்க்கை முழுவதும் பொருளாதாரச் சிக்கல்களால் பாதிக்கப்பட்டார்.

கொழும்பில் ஒரு முஸ்லிம் பெண் தனது கணவரிடம் இருந்து தலாக் பெற்றபின், காதி நீதிமன்றத்தில் வழக்கை எடுத்து சென்றார். ஆனால் வழக்கறிஞரை நியமிக்க அனுமதி கிடைக்காததால், நீதி பெறுவதற்குப் பல ஆண்டுகள் போராட வேண்டிய சூழல் உருவானது.

மட்டக்களபபில் திருமணத்துக்குப் பின் வேலைக்குச் செல்ல விரும்பிய பெண்ணை, குடும்பம் மற்றும் சமூக அழுத்தங்கள் தடுப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் நிலைமை, சட்டப் பாகுபாடுகள், சமூக அழுத்தங்கள் என இருவித சிக்கல்களால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. MMDA போன்ற சட்டங்களில் திருத்தங்கள் அவசியம் என்றாலும், அது போதுமானதல்ல. சமூக மனப்போக்கில் மாற்றம் ஏற்படாமல், பெண்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் திறந்திடாமல், அவர்களின் வாழ்வியலில் உண்மையான முன்னேற்றம் காண இயலாது.

**அப்துல் அஸீஸ் அஸ்மா ,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.







# காந்தள்மலர்...!



செ.அனுத்திரா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

"குருதி ஒண் பூ உரு கெழக் கட்டி, பெரு வரை அடுக்கம் பொற்பச் சுரம்கள் அருவி இன் இயத்து ஆடும் நாடன்.." நற்றிணை பாடல் வரிகள் எவ்வளவு அழகானவை.

நீண்ட நாள்களின் பின்னர் ஊருக்குச் சென்றிருந்தேன். பச்சை பசேல் எனச் செழிப்பாக இருந்தது ஊர். ஆங்காங்கே பற்றைகள், மரங்கள் மேல் கார்த்திகை பூ செடி படர்ந்திருந்தது. அதன் மொட்டுக்கள் பூப்பதற்குத் தயாராகி இருந்தன. அவற்றை காண்கின்ற போதுதான் கார்த்திகை பிறந்து விட்டது என்பது நினைவு வந்தது.

அப்பாவைத் தட்டிக் கேட்டேன் "அப்பா கார்த்திகை பூ... பூக்க வெளிகிட்டுட்டுது" என. "இப்பதான கார்த்திகை பிறந்திருக்கு போகப் போகத்தான் நிறைய பூக்கும். இப்ப ஒன்று இரண்டு பூத்திருக்கும் மொட்டுக்கள் இருந்திருக்கும்" என கூறினார்.

ஆம்! கார்த்திகை பூ Colchicaceae எனும் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த 12 இனங்களில் ஒன்றாக இடம் பெறுகின்றது. தென்னாப்பிரிக்கா மற்றும் ஆசியாவின் வெப்பமண்டலப் பகுதிகளில் இயற்கையாக வளர்கின்றன. கார்த்தி பூ "the flame lily" என்றும் அழைக்கப்படுகிறது. இதன் தாவரவியல் பெயர் Liliaceae Glory lily அல்லது Gloriosa superba ஆகும்.

கார்த்திகைப் பூவின் தோற்றம் ஆறு இதழ்களைக் கொண்டிருக்கும். இதழ் நுனி உள்நோக்கி வளைந்ததும், விளிம்பு அலை அலையாக காணப்படும். முழு மலர்ச்சிக்குப் பின்னர் ஏழு நாள்கள் வாடாமல் இருக்கும். இதழ்களின் நிறம் ஆரம்பத்தில் பச்சை நிறமாக இருக்கும், பின்னர் வெள்ளை கலந்த மஞ்சள் தொடக்கம் மஞ்சளாக மாறும். பின்னர் சிவப்பு கலந்த மஞ்சள் தொடக்கம் கருஞ்சிவப்பு நிறமாகவும், சிவப்பு நிறமாகவும் மாறும். தனித்துவமான நிறத்தால் அனைவரது கவனத்தை ஈர்க்கும் தன்மை கொண்டது.

"முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்" கார்த்திகை பூவைச் சங்ககால இலக்கியங்களான அகநானூறு, நற்றிணையில் அதிகம் பயன்படுத்தப்பட்டிருப்பதை காணக் கூடியதாக இருக்கும். காரணம் காந்தள் மலர் தலைவியின் மெல்லிய விரல்களுக்கு உவமையாக கூறப்பட்டிருக்கும். அதன் அழகு அத்தகையது. தீ கொழுந்துவிட்டு எரிவது போல் காணப்படுவதால் 'அக்னிசலம்' என்றும் கிழங்கு கலப்பையைப்போன்ற தோற்றத்துடன் காணப்படுவதால், அதை 'ஹகலப்பை' என்றும் 'இலாங்கிலி' என்றும் அழைப்பர்.

இலைகளின் நுனி சுருண்டு காணப்படுவதால், 'தலைச்சுருளி' என்றும். தாவரங்களைப் பற்றிக் கொண்டு வளர்வதால் 'பற்றி' என்றும் வளைந்து பற்றிக்கொள்வதால், 'கோடல்', 'கோடை' என்று அழைக்கப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் பூ பூப்பதால் 'கார்த்திகைப்பூ' எனப்படுகிறது. மழைக்காலத்தில் வனப்புடன் காணப்படுவதால், 'தோன்றி' என்றும் நாட்டு மருத்துவத்தில் 'வெண் தோண்டி' என்றும் அழைக்கப்படுவதுண்டு . பூக்களின் நிறம் வேறுபடுவதால், 'வெண்காந்தள்' என்றும், 'செங்காந்தள்' என்றும் வர்ணிக்கிறார்கள். கிழங்கு பிரிந்து கணுக்கள் காணப்படுவதை, 'ஆண்காந்தள்' என்றும் கணுக்கள் இல்லாததை 'பெண்காந்தள்' என்றும் கூறப்படுகிறது.

இம்மலரின் தனித்தன்மை தமிழீழ தேசியக் கொடியின் நிறங்களை கொண்டிருப்பதால் தமிழீழத்தின் தேசிய மலராக கொண்டாடப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த மாவீரர்களுக்கு நினைவுகூரும் மாதமான கார்த்திகை மாதத்தில் மலருகின்றது. கார்த்திகை பூ பற்றிய பாடல்களும் அதிகம் உருவாகி உள்ளன. சிம்பாவே நாட்டின் தேசிய மலராகவும் தமிழகத்தின் மாநில மலராகவும் உள்ளமை சிறப்பான விடயமாகும்.

கார்த்திகை செடி கிழங்கில் இருந்து குறித்த காலத்தில் மட்டும் முளைத்துப் பூத்து பின் மடிந்து நிலத்தின் கீழ் உயிர்வாழும் தன்மை கொண்டது. கார்த்திகைச் செடியின் சகல பகுதிகளிலும் நச்சுத்தன்மை இருக்கின்றது. கார்த்திகைச்செடி உடலுக்குள் சென்றால் மயக்கம் ஏற்படும். உயிராபத்தும் ஏற்படும். எனினும் உலகளாவிய ரீதியில் மருத்துவ இரசாயனத் தேவைகளுக்காக வளர்க்கப்படுகின்றது.

கார்த்திகைச்செடி 1.8 மீற்றர் தொடக்கம் 2.4 மீற்றர்வரை வளரும். இதன் வாழ்வுக்கு 15 பாகை செல்சியஸ் முதல் 30 பாகை செல்சியஸ் வரை சூழல் வெப்பம் இருக்க வேண்டும். பூக்கள் செழுமையாக இருக்க வளிமண்டல ஈரப்பதன் அதிகமாக இருக்க வேண்டும். சராசரி அமிலத் தன்மையுடைய ஈரமான மண் இதன் வாழ்வுக்குத் தேவை. செடி இறந்ததும் இதன் கிழங்கு மண்ணின் கீழ் வாழ்வதற்கு 20-25 பாகை செல்சியஸ் வெப்பம் தேவை. இதிலிருக்கும் நச்சுப்பொருள் alkaloid colchicine ஆகும். gloriosine என்ற நச்சுப்பொருளும் இதில் உள்ளது.

வீட்டுக்கு சென்றவுடன் வழமையாக வீட்டு மண் கிணற்றடியில் கார்த்திகை செடி முளைக்கின்ற இடத்துக்குச் சென்று பார்த்த போது அங்கு கார்த்திகை செடி பூத்திருந்தது. சிறுவயதில் நண்பர்களுடன் சேர்ந்து பூக்களை பறித்து அதன் மகரந்தத்தை ஒவ்வொருவர் முகத்திலும் ஒவ்வொருவர் பூசி விளையாடியது என் நினைவுக்கு வந்தது. பலர் உள்ளத்தில் ஞாபகங்களையும் வலிகளையும் காந்தள் மலர் கவர்ந்து வைத்திருக்கின்றது.

# அ.தி.மு.க. தலைமைக்கு எதிராக துரோகம் செய்தால் நடவடிக்கை

## செங்கோட்டையன் நீக்கம் குறித்து இ.பி.எஸ். விளக்கம்



"பொதுக்குழு தீர்மானத்துக்கு எதிராக, கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டமையால் அ.தி.மு.கவில் இருந்து செங்கோட்டையன் நீக்கப்பட்டார். யார் துரோகம் செய்தாலும் கட்சித் தலைமை வேடிக்கை பார்க்காது."

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி திட்டவட்டமாக தெரிவித்தார்.

அ.தி.மு.கவில் இருந்து செங்கோட்டையன் நீக்கப்பட்டமை குறித்து சேலத்தில் செய்தியாளர்களிடம் கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி நேற்று கருத்து தெரிவிக்கையில்,

"அ.தி.மு.க. ஆட்சியில் அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை கொண்டு வந்ததற்காக விவசாயிகள் சார்பில் எனக்கு பாராட்டு விழா நடத்தினர். இந்த திட்டத்தால் செங்கோட்டையனின் கோபி தொகுதியும் பயனடையும் நிலையில் கூட, விழா பதாகையில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா படங்கள் இல்லை என்று கூறி, அந்த விழாவை செங்கோட்டையன் புறக்கணித்தார். ஆனால், அவரது தொகுதியில், மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சியில், கருணாநிதி, ஸ்டாலின் படங்கள் மட்டுமே இருந்த நிலையிலும் அதில் அவர் கலந்து கொண்டார். தி.மு.கவின் 'பி' அணி வேலையை அப்போதே பார்க்க ஆரம்பித்துவிட்டார்.

அ.தி.மு.கவில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் இணைக்க வேண்டும் என்று அவர் கூறுவது சரியான கருத்து அல்ல. அவர் கூறுபவர்கள் எல்லோரும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள். பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி ஓ.பி.எஸ். நீக்கப்பட்டார். அவருடன் கட்சியினர் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுக்குழு தீர்மானத்துக்கு எதிராக, கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதால், சட்டவிதிகளின்படி செங்கோட்டையன் நீக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையில் இருந்தும், மாவட்டச் செயலாளர் பதவியில் இருந்தும் அவரை ஜெயலலிதா நீக்கினார். ஆனால், நான் முதல்வரானபோது, அவருக்கு அமைச்சரவையில் இடம் தரப்பட்டது. ஜெயலலிதா கடந்த 2011 இல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து டி.டி.வி. தினகரனை கட்சியில் இருந்து நீக்கினார். ஜெயலலிதா மறைந்த பிறகே, தினகரனுக்கு துணைப்பொதுச் செயலாளர் பதவியை சசிகலா வழங்கினார்.

சட்டப்பேரவையிலோ, பொதுக்கூட்டத்திலோ செங்கோட்டையன் தி.மு.கவை எதிர்த்து பேசியது கிடையாது. அவர் தி.மு.கவின் 'பி அணி' என்பது நிரூபணம் ஆகிவிட்டது. யார் விரோதமாக செயல்பட்டாலும், துரோகம் செய்தாலும் கட்சித் தலைமை வேடிக்கை பார்க்காது.

ஆட்சியைக் கவிழ்க்க 18 எம்.எல். ஏக்களை கட்சியில் இருந்து வெளியே அழைத்துச் சென்றவர் தினகரன். அவர் எப்படி கட்சிக்கு விசுவாசமாக இருப்பார். ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர், சட்டப்பேரவையில் அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராக வாக்களித்தவர் ஓ.பன்னீர்செல்வம். நாங்கள் அவருக்கு ஒருங்கிணைப்பாளர் பொறுப்பை கொடுத்தோம். ஆனாலும், அவர், எதிராகவே செயல்பட்டார். அ.தி.மு.க. அலுவலகத்தை ஆட்களை வைத்து அடித்து நொறுக்கினார். இப்படிப்பட்டவர்கள் கட்சிக்கு உண்மையாக இருப்பார்களா? பதவி இல்லை என்றால் எந்த எல்லை வரையும் செல்வார்கள்.

தி.மு.க. ஆட்சிக்கு வர வாய்ப்பு உள்ளது என 4 நாள்களுக்கு முன்பு கூறினார். அ.தி.மு.க. ஆட்சி வர வேண்டும் என இவர்கள் நினைக்கவில்லை. மறைமுகமாக ஆதரித்து, தி.மு.க. ஆட்சிக்கு வர நினைக்கிறார்கள். இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து 2026 சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.கவுக்கு 'பி அணி' ஆக செயல்படுவதுதான் திட்டம். சசிகலா பற்றி சமூக வலைதளங்களில் ஓ.பி.எஸ். பதிவு செய்ததை பாருங்கள். 'மருத்துவமனையில் அம்மா இருந்த போது, சசிகலா பேசாதது ஏன்? குற்றவாளி சசிகலா. தப்பியது தமிழகம். சசிகலா உள்ளிட்ட மூவர் உடனே சரணடைய உத்தரவு..' இதெல்லாம் வலைதளங்களில் ஓ.பி.எஸ். பதிவு செய்தவை. கட்சிக்கு துரோகம் செய்தவர்கள் இன்று அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்." என்று தெரிவித்துள்ளார்.

# தி.மு.கவிடமிருந்து தமிழகத்தை மீட்போம்

## விஜய் தெரிவிப்பு



"மக்கள் விரோத தி.மு.கவிடமிருந்து மக்கள் சக்தியின் துணையோடு தமிழகத்தை மீட்போம். 2026 இல் உண்மையான மக்களாட்சியை அமைப்போம்."

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தினத்தையொட்டி விஜய் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"தமிழ்நாடு உருவாகக் காரணமான எல்லைப் போராட்டத் தியாகிகளையும் "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டக் காரணமானவர்களின் தியாகங்களையும் நினைவுகூர்வோம். அவர்களை எந்நாளும் போற்றுவோம்.

மக்கள் விரோத தி.மு.கவிடமிருந்து மக்கள் சக்தியின் துணையோடு தமிழ்நாட்டை மீட்போம். 2026 இல் உண்மையான மக்களாட்சியை அமைப்போம். தமிழின் பெருமையும் தமிழ்நாட்டின் புகழும் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கட்டும். இனிய தமிழ்நாடு நாள் நல்வாழ்த்துகள்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. ஆட்சி முடிவதற்கான நாள்கள் எண்ணப்படுகின்றன

## நயினார் நாகேந்திரன் கருத்து

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி முடிவதற்கான ஹகவுன்ட் டவுன்” தொடங்கிவிட்டது என பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறிதெரிவித்துள்ளார்.

ராஜராஜ சோழனின் 1040 ஆவது சதய விழாவை முன்னிட்டு, தஞ்சாவூரில் நேற்று அவரது சிலைக்கு பா.ஜ.க. சார்பில் நயினார் நாகேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதன்போது நயினார் நாகேந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

“பெரிய கோயிலுக்கு வெளியே உள்ள ராஜராஜ சோழன் சிலையை கோயிலுக்கு உள்ளே வைப்பது குறித்து தலைவர்களிடம் ஆலோசித்து, அதனடிப்படையில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வோம்.

நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளன. நெல்மணிகள் முளைத்து வீணாகி வருகின்றன. விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால், இதுகுறித்து கவலைப்படாமல் முதல்வரும், துணை முதல்வரும் சினிமா பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தி.மு.க. ஆட்சி முடிய இன்னும் 140 நாள்கள்தான் உள்ளன. இதற்கான “கவுன்ட் டவுன்” தொடங்கிவிட்டது. வரும் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கண்டிப்பாக வெற்றிபெறும். “ - என்றார்.



முன்னதாக, கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

“கும்பகோணத்தில் ஏராளமான கோயில் கோபுரங்கள் சேதமடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளன. அவற்றை சரிசெய்வது குறித்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு சிந்திக்க வேண்டும். அதை விட்டுவிட்டு மாற்றுக் கட்சியின் பிரச்சினை குறித்து அவர் பேச வேண்டிய அவசியம் இல்லை. மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் ஏக்கருக்கு 30 ஆயிரம் இந்திய ரூபா நிவாரணம் வழங்க வேண்டும்.” - என்றார்.



# சமூக ஊடக நிறுவனங்களுக்கு பிரித்தானிய அரசு எச்சரிக்கை

பிரித்தானிய அரசு, குழந்தைகளை பாதுகாக்கும் அல்கோரிதங்களை நிரூபிக்க தவறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என சமூக ஊடக நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானியாவின் தகவல் தொடர்பு ஒழுங்குமுறை அமைப்பான முகஉழுஅ, ஓுழரவரடிந, குயஉநடிழழம, சுழடிடழஒ போன்ற முக்கிய சமூக ஊடக நிறுவனங்களுக்கு புதிய எச்சரிக்கை விடுத்துள்ளது.

இணைய பாதுகாப்பு சட்டத்தின் கீழ், இவை தங்களது அல்கோரிதங்கள் குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களிலிருந்து பாதுகாக்கும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

தவறினால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என முகஉழுஅ தலைமை நிர்வாக அதிகாரி மெலனி டாவ்ஸ் தெரிவித்துள்ளார்.

அல்கோரிதம்கள் குழந்தைகளுக்கு பெரியவர்களுக்கான உள்ளடக்கங்களை பரிந்துரைப்பது குறித்து Ofcom கவலை தெரிவித்துள்ளது.

மேலும், குழந்தைகள் தனிப்பட்ட செய்திகளை பெற முடியாதவாறு பாதுகாப்பு அமைப்புகள் உள்ளனவா என்பதையும் Ofcom ஆராய்கிறது.

இணைய பாதுகாப்பு சட்டத்தின் ஒரு பகுதியாக, Ofcom சமூக ஊடக நிறுவனங்களின் பரிந்துரை அமைப்புகளை “அல்கோரிதம்கள் ஆய்வு” செய்ய உத்தரவிடும் அதிகாரம் பெற்றுள்ளது.

2025 ஜூலை மாதம் முதல், பெரியவர்களுக்கான உள்ளடக்கங்களை குழந்தைகள் அணுக முடியதவாறு கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, 12 இற்கும் மேற்பட்ட ஆபத்தான இணையதளங்கள் பிரித்தானியாவில் முடக்கப்பட்டுள்ளன, இதில் போர்னோ மற்றும் தற்கொலை தொடர்பான தளங்களும் அடங்கும்.

Ofcom இந்த முயற்சியை நல்ல தொடக்கம் எனக் கூறியுள்ளது.




# பிரித்தானியாவில் ரயிலில் இடம்பெற்ற கத்தி குத்து தாக்குதலில் 10 பேர் காயம்

பிரித்தானியாவில் ரயிலில் இடம் பெற்ற கத்தி குத்து தாக்குதலில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

பிரித்தானியாவின் கேம்பிரிட்செயர் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பேரை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அத்துடன் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நோயாளர்

## இருவர் கைது


காவு வண்டிகள் ஊடாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னதாக தீவிரவாத தாக்குதல் என அறிவிக்கப்பட்ட போதிலும், பின்னர் அந்த அறிவிப்பு மீள பெற்றுக்கொள்ளப்பட்டது.

விசாரணகைளின் பின்னர் எவ்வாறான தாக்குதல் என்பது குறித்து அறிவிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கத்தி குத்து தாக்குதல் சம்பவம் தொடர்பில் மிகுந்த கரிசனை கொண்டுள்ளதாகவும், மேற்படி பகுதியில் இருப்பவர்கள் பொலிஸாரின் அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் எனவும் பிரித்தானிய பிரதமர் கியர் ஸ்ட்ராமர் தெரிவித்துள்ளார்.













# தென் கொரியா – சீனா இடையே 7 புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்து

## வலுப்பெறும் இருநாட்டு உறவு

தென் கொரியா மற்றும் சீனா இடையே 7 புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தென் கொரியா மற்றும் சீனா இடையே கையெழுத்தாகியுள்ளது.

கியோங்ஜு'வில் நடைபெற்ற ஏபெக் மாநாட்டில் தென் கொரிய ஜனாதிபதி லீ ஜே மியுங் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இடையிலான உயர்மட்ட சந்திப்புக்கு பிறகு இந்த ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் கொரிய வோன் மற்றும் சீன யுவான் இடையிலான நாணய மாற்று ஏற்பாடு முக்கியமான ஒன்றாகும்.

மேலும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் வணிகம், தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான ஒத்துழைப்பும் அடித்தளமிடப்பட்டுள்ளது.

# லூவ்ரே அருங்காட்சியக கொள்ளை தொடர்பில் 38 வயதுடைய பெண் மீது குற்றச்சாட்டு பதிவு







பிரான்சில் உள்ள புகழ்பெற்ற லூவ்ரே அருங்காட்சியகத்தில் நடைபெற்ற நகை கொள்ளை சம்பவம் தொடர்பில் 38 வயதுடைய ஒரு பெண் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவர் பாரிஸ் நகரின் புறநகர் பகுதியில் உள்ள லா குர்னூவ் என்ற இடத்தில் வசித்து வருகிறார்.

பிரான்ஸ் பொலிஸார் கடந்த வாரம் இந்த பெண் உட்பட 5 பேரை கைது செய்தனர்.

அவர் மீது, இந்த திட்டமிட்ட கொள்ளையில் உடன்பாடு மற்றும் குற்றவாளிகளுடன் சதியில் ஈடுப்பட்டார் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

தற்போது நீதிமன்ற மஜிஸ்திரேட் அவரை காவலில் வைக்க வேண்டுமா என்பதை தீர்மானிக்க உள்ளார்.

அதேநேரம், திருடப்பட்ட நகைகளை மீட்கும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த நகைகள் பிரான்சின் அரச குடும்பத்தினருக்கு சொந்தமானவை என்றும், மதிப்பீடு செய்ய முடியாத அளவுக்கு விலைமதிப்புள்ளவை என்றும் கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த நாளில் லூவ்ரே அருங்காட்சியகம் ஒரு நாள் முழுவதும் மூடப்பட்டிருந்தது. அருங்காட்சியகத்தின் முற்றம் வெறுமையாக காணப்பட்ட நிலை, பார்வையாளர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த வழக்கின் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், பிரான்ஸ் முழுவதும் இந்த சம்பவம் குறித்து பரபரப்பான விவாதங்கள் எழுந்துள்ளன.

பாதுகாப்பு முறைகள், அருங்காட்சியகத்தின் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் குற்றவாளிகள் பயன்படுத்திய யுக்திகள் குறித்து அதிகாரிகள் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றனர்.

பக்கங்கள் 02

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 02/11/2025

## கரீபியன் நாடுகளுக்கு உதவும் கனடா அரசு



கரீபியக் கடற்கரையை 02▶



# கனடா பிரதமர் மார்க் கார்னி தன்னிடம் மன்னிப்பு கேட்டார் என்கின்றார் ட்ரம்ப்

ஆத்திரமூட்டும் வகையில் கனடா வெளியிட்ட விளம்பர காணொலி தொடர்பில், கனடா பிரதமர் தன்னிடம் மன்னிப்புக் கேட்டார் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் சமீபத்தில் பிரச்சார காணொலி ஒன்றை வெளியிட்டிருந்தது.

02▶

# போதைப் பொருள் கடத்திய இளைஞர் கனடாவில் கைது




இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட போதைப் பொருளுடன் கனடாவில் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

4 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக ஒன்டாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து டொரோண்டோவுக்கு வந்த ஒரு பொதியில் போதைப் பொருள் இருப்பது கண்டறியப்பட்டது. கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவனம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

அந்தப் பொதியிலிருந்த பொருள் ஒட்டாவா நகரின் மெடேவ்லென்ட்ஸ் வீதி பகுதியில் உள்ள முகவரிக்கு அனுப்பப்படுவதாக இருந்தது.

இதையடுத்து, ஒன்றாரியோ பொலிஸார் மற்றும் கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் அதிகாரிகள் கடந்த 24திகதி அந்த முகவரியில் தேடுதல் நடத்தி, ஒருவரை கைது செய்தனர்.

இந்த சம்பவத்தில் 33 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.






# கார் மீது சிறுநீர் கழித்தவரை தட்டிக்கேட்டவர் கொலை

கனடாவில், தன் கார் மீது சிறுநீர் கழித்த கனேடியரை தட்டிக்கேட்ட இந்திய வம்சாவளியினர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி, கனடாவின் எட்மண்டன் நகரில், இந்திய வம்சாவளியினரான அர்வி சிங் சாகூ (வயது 55) என்பவர் தனது காதலியுடன் உணவகம் ஒன்றிற்குச் சென்றுள்ளார்.

உணவகம் சென்றுவிட்டு தன் கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு வந்த போது, அங்கு ஒருவர் தனது கார் மீது சிறுநீர் கழிப்பதைக் கவனித்துள்ளார்.

என்ன செய்கிறாய் என அவர் கேட்க, என்ன வேண்டுமானாலும் செய்வேன் என அந்த நபர் கூறியதுடன், அவரை தலையில் தாக்கியுள்ளார்.

மேற்படி இந்திய வம்சாவளியினர் கீழே விழ, அவரது காதலி அவசர உதவியை அழைத்துள்ளார். அவசர உதவிக்குழுவினர் வரும்போது அவர் சுய நினைவின்றிக் கிடந்துள்ளார்.

உடனடியாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். என்றாலும், சிகிச்சை பலனின்றி ஐந்து நாள்களுக்குப் பின் அவர் உயிரிழந்துள்ளார்.

## கரீபியன் நாடுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்கிய சக்திவாய்ந்த 'மெலிசா' சூறாவளியால் இதுவரை எந்தக் கனடியரும் உயிரிழக்கவில்லை என்று கனடாவின் வெளிநாட்டு உதவிகளை கண்காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரன்தீப் சராய் தெரிவித்துள்ளார்.

இது மிகப் பெரிய பேரிடர் எனவும் ஆபத்து நிலையில் மிகவும்மோசமான புயல் இது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜமைக்கா இதுவரை சந்தித்த மிக வலிமையான புயல் இதுதான். அத்தகைய அழுத்தத்துக்கு எந்தக் கட்டுமானமும் எதிர்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடா தற்போது சூழ்நிலையை மிக நெருக்கமாகக் கண்காணித்து வருவதாகவும் தேவையான போதெல்லாம் மனிதாபிமான உதவிகள் அல்லது தளவாட ஆதரவுகள் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜமைக்கா மற்றும் கியூபா ஆகியவை ஐக்கிய நாடுகள் அவசர நிதியிலிருந்து தலா 4 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுள்ளதாகவும், அந்த நிதிக்கு இந்த ஆண்டு கனடா 29 மில்லியன் டொலருக்கு மேல் பங்களித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், கனடா ஆதரிக்கும் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உலக உணவு திட்டம் வழியாகவும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என கனடாவின் வெளிநாட்டு உதவிகளை கண்காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரன்தீப் சராய் தெரிவித்துள்ளார். தெரிவித்தார்.

இரு அரசுகளுடனும் இணைந்து நாம் இன்னும் என்ன செய்யலாம் என்பதை ஆய்வு செய்கிறோம். எந்தக் கோரிக்கையும் வந்தால் கனடா அதனை நேர்மறையாக பரிசீலிக்கும் என சராய் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், கனடாவின் வெளிவிவகாரத்துறை அவசர உதவி குழுவை கரீபியன் பகுதிக்கு அனுப்பி, அங்குள்ள கனடியர்களுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது.



## கனடா பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த காணொலியில், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான ரொனால்ட் ரீகன், வரிவிதிப்புக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

அந்த காணொலி தொடர்பில் கோபமடைந்த ட்ரம்ப், கனடாவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் அனைத்தையும் உடனடியாக ரத்து செய்வதாக அறிவித்தார்.

இந்நிலையில், தற்போது அந்த காணொலி தொடர்பில் கனடா பிரதமரான மார்க் கார்னி, தன்னிடம் மன்னிப்புக் கேட்டார் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே ட்ரம்ப் இதனை தெரவித்துள்ளார்.

மேலும், எனக்கு மார்க் கார்னியுடன் நல்ல நட்பு உள்ளது, அவரை எனக்கு மிகவும் பிடிக்கும் என்று கூறியுள்ளார்.

அதே நேரத்தில், கனடாவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் தொடருமா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு தொடராது என ஒரே வார்த்தையில் பதில் கூறியுள்ளார்.

உண்மையாகவே மார்க் கார்னி ட்ரம்பிடம் மன்னிப்புக் கோரினாரா? என்பதை தெரிந்துக் கொள்ள ஊடகங்கள் கனடா பிரதமர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டபோது, கனடா அமெரிக்க வர்த்தக அமைச்சரான டொமினிக்கின் செய்தித்தொடர்பாளர், இவ்விடயம் தொடர்பில் தற்போது எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க முடியாது என கூறியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.